# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1808 - 2013 අප්‍රේල් මස 26 වැනි වැනි සිකුරාදා - 2013.04.26

*1808 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*


*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1086 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவு திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 1098 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் | | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 1112 |


**கவனிக்க.**- (i) சுங்கம் (திருத்தம்) சட்டமூலம் 2013, பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(ii) நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தம்) சட்டமூலம் 2013, பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(iii) முஸ்லிம் திருமண மணநீக்கம் (திருத்தம்) சட்டமூலம் 2013, பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2013, மே மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, மே மாதம் 03 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# பதவிகள் — வெற்றிடம்

**வடமேல் மாகாண சபை**

உடுபத்தாவ பிரதேச சபை

உடுபத்தாவ பிரதேச சபையில் வெற்றிடமாகியுள்ள கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள ஆரம்ப தரத்தில் தேரச்சி பெறாத, பகுதி தேர்ச்சி பெற்றதும் தேர்ச்சி பெற்ற பதவிகளுக்காக உரிய தகைமையுடைய உடுபத்தாவ பிரதேச சபை அதிகாரப் பிரிவிற்குள் நிரந்தரமாக வசிக்கின்றவர்களிடமிருந்து விண்ணப்பப்படிவங்கள் கோரப்படுகின்றன.

*1.* **ஆரம்ப தரத்தில் தேர்ச்சி பெறாத :**

| பதவிப் பெயர் | வெற்றிட பதவிகளின் எண்ணிக்கை | மாதாந்த சம்பளத்திட்டம் |
|---|---|---|
| (ஆரம்ப தரத்தில் தேர்ச்சி பெறாத) காவற்காரர் III ஆம் தரம் | 01 | அ. நி. சு. 6/2006 (IV) PL1 2006 A வண்ணம் ரூபா 11,730 -10×120 -10×130 - 10×145- 12 ×160 - ரூபா17,600 |
| (ஆரம்ப தரத்தில் தேர்ச்சி பெறாத) சுகாதார தொழிலாளர் III ஆம் தரம் | 04 | அ. நி. சு. 6/2006 (IV) PL1 2006 A வண்ணம் ரூபா 11,730 -10×120 -10×130 - 10×145- 12 ×160 - ரூபா17,600 |
| (ஆரம்ப தரத்தில் தேர்ச்சி பெறாத) பாதைகள் தொழிலாளர் III ஆம் தரம் | 06 | அ. நி. சு. 6/2006 (IV) PL1 2006 A வண்ணம் ரூபா 11,730 -10×120 -10×130 - 10×145- 12 ×160 - ரூபா17,600 |

1.1 **கல்வித் தகைமை.**- (அ) வெளிவிண்ணப்பதாரிகள் கல்வி பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு (2) பாடங்களிலாவது சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

*2.* **ஆரம்ப தர பகுதி தேர்ச்சி பெற்ற :**

| பதவிப் பெயர் | வெற்றிட பதவிகளின் எண்ணிக்கை | மாதாந்த சம்பளத்திட்டம் |
|---|---|---|
| (ஆரம்ப தர பகுதி தேர்ச்சி பெற்ற) மின் தொழில் நுட்பவியலாளர் III ஆம் தரம் | 01 | அ. நி. சு. 6/2006 (IV) PL2 2006 A வண்ணம் ரூபா 12,210 -10×130 -10×145 - 10×160- 12 ×170 - ரூபா18,600. |

***கல்வித் தகைமைகள் :***

2.1 (அ) வெளிவிண்ணப்பதாரிகள்.- கல்வி பொது தராதர சாதாரண தர பரீட்சையில் இரண்டு பாடங்களேனும் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (தெரிவுப்பாடம் அல்லாத).

(ஆ) உள்வாரி விண்ணப்பதாரிகள்.- மாகாண அரச சேவையில் உரிய நிறுவனத்தில் நிரந்தர பதவியில் சேவையில் உள்ள விண்ணப்பதாரிகளுக்காக அரசினால் அனுமதிக்கப்பட்ட பாடசாலையில் 8 ஆம் தரம் (9 ஆம் வருடம்) சித்தியடைந்திருத்தல்.

2.2 ***தொழில்நுட்பத் திறமையும் அனுபவமும் :***

(அ) அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப பாடசாலையில் அல்லது தொழிற்பயிற்சி நிறுவனத்தில் அல்லது இரண்டாம் நிலை நிறுவனத்தில் மின்சார தொழில்நுட்பம் பற்றிய பயிற்சி சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். N. V. Q. - II அல்லது III தரத்தில் சான்றிதழ் பெற்றிருத்தல்.

(ஆ) அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனத்தின் கீழ் இரண்டு வருடத்திற்கு அதிக காலம் சேவை அனுபவம் இருத்தல் வேண்டும். (சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்)

*3.* **பொது நிபந்தனைகள்.**-

3.1 விண்ணப்பப்படிவம் ஏற்கப்படும் கடைசி திகதிக்கு வயது 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.

3.2 விண்ணப்பதாரி பரம்பரையாகவோ பதிவினாலோ இலங்கை குடியுரிமையுள்ளவராக இருத்தல் வேண்டும்.

3.3 நல்லொழுக்கமும் ஆரோக்கியமுள்ளவராக இருத்தல் வேண்டும்.

3.4 தற்போது அரச மற்றும் மாகாண அரச சேவையில் உள்ளவராயின் அவர் விண்ணப்பப்படிபவம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதிக்கு 5 வருடங்களுள் ஏதேனும் குற்றங்களுக்குற்படாமலும் 5 வருடங்களினுள் எல்லா சம்பள உயர்வுகளும் பெற்றிருத்தல் வேண்டும்.

3.5 விண்ணப்பதாரி விண்ணப்பப்படிவம் பொறுப்பேற்கும் கடைசி திகதிக்கு 3 வருடங்களுக்கு குறையாத காலத்தினுள் உடுபத்தாவ பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தினுள் நிரந்தர வதியுனராக இருத்தல் வேண்டும். (பதிவினை கிராம நிலதாரியினால் வெளியிடப்படும் சான்றிதழ் மூலம் உரிய பிரதேச செயலாளரினால் பிரதி கையொப்பமிடப்பட்டு சான்றுபடுத்தப்பட்டிருத்தல் வேண்டும்)

3.6 இந்த ஆட்சேர்ப்பு ஒப்பந்தங்களுக்கும் உடன்படிக்கைகளுக்கும் மேலதிகமாக இலங்கைச் சோசலிசக் குடியரசின் தாபனக் கோவை மற்றும் நிதிச் சட்டக் கட்டளைகளுக்கு உடன்படல் வேண்டும்.

3.7 உடுபத்தாவ பிரதேச சபையில் தற்போது நிரந்தர/ அமைய/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட சேவையாளர்களுக்கு மாத்திரம் மேலதிக சலுகை வழங்கப்படும் (மகிழ்ச்சிகரமான சேவை காலம் இருந்தது பற்றி சேவைச் சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.)

3.8 விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின் அல்லது ஏற்றுக்கொள்ளும் போது அல்லது இந்த சேர்த்துக்கொள்ளல் காலந்தாழ்த்தல் அல்லது வேறுபடுத்தல் அல்லது இந்த அறிவித்தல் தள்ளுபடி செய்தல் அல்லது திருத்தல் என்பற்றிற்கான பூரண அதிகாரம் உடுபத்தாவ பிரதேச சபை செயலாளருக்கே உரித்தானதாகும்.

4. **விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முறை.-**

4.1 எல்லா விண்ணப்பதாரிகளும் இங்கு கீழ் உள்ள மாதிரி விண்ணப்பப்பத்திரப்படி விண்ணப்பப்படிவம் 2013.05.31 ஆந் திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக "செயலாளர், உடுபத்தாவ பிரதேச சபை" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படவேண்டும். விண்ணப்பப் பத்திரத்தை அனுப்பும் கடித உறையின் மேல் பக்கத்தில் உரிய பதவியினை குறிப்பிட வேண்டும்.

4.2 விண்ணப்பப்படிவம் A4 அளவிலான கடதாசியில் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். அதனுடன் கீழ் காணப்படும் சான்றிதழ்களின் போட்டோ பிரதி இணைத்து அனுப்ப வேண்டியதுடன் நேர்முகப் பரீட்சையின்போது முதல் பிரதியினை சமர்ப்பித்தல் வேண்டும்.

(1) பிறப்புச் சான்றிதழ் ;

(2) கல்விச் சான்றிதழ் ;

(3) வதிவு பற்றிய கிராம உத்தியோகத்தரின் சான்றிதழ் ;

(4) அண்மையில் பெற்றுக்கொண்ட நல்லொழுக்கம் பற்றிய சான்றிதழ் ;

(5) தொழில் அனுபவம் பற்றிய சான்றிதழ் ;

(6) சேவைச் சான்றிதழ் (தற்போது அரச அல்லது மாகாண அரச சேவையில் உள்ளவர்களுக்கு மாத்திரம்).

ஐ. எம். டீ. இலங்கோன்,
செயலாளர்,
உடுபத்தாவ பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
உடுபத்தாவ,
2013.04.26.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**உடுபத்தாவ பிரதேச சபை**

உடுபத்தாவ பிரதேச சபையில் தேர்ச்சி பெற்ற, பகுதி தேர்ச்சி உடைய, தேர்ச்சி அற்ற
தரத்திலான ................................ பதவிக்காக ஆட்சேர்ப்பு

1. விண்ணப்பதாரியின் முழுப்பெயர் :----.
முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
2. தபால் முகவரி :----.
3. பிரதேச செயலாளர் பிரிவு :-----.
4. பிறந்த திகதி :-
ஆண்டு :----, மாதம் :----, திகதி :----.
5. விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதிக்கு வயது :
வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.
6. தேசிய ஆள் அடையாளட்டை இலக்கம் :----.
7. திருமணமானவர்/திருமணமாகாதவர் என்பது பற்றி :----.
8. சாதி :----.

9. நீங்கள் இலங்கை பிரசையா? அவ்வாறாயின் பரம்பரையாகவா? பதிவு முறையிலா? :----.
10. கல்வி தகைமை :----.
11. தேர்ச்சி பற்றிய திறமை :----.
12. தொழிற் திறமை :----.
13. நீங்கள் தற்போது இந்தப் பிரதேச சபையில் சேவை ஆற்றுபவராயின் :----.
    (i) தற்போது வகிக்கும் பதவி :----.
    (ii) அந்த பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி :----.
    (iii) அந்த நியமனத்தின் தன்மை (நிரந்தர/அமைய/தற்காலிக/ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்டது பற்றி) (உரிய நியமனக் கடிதத்தின் பிரதியினை இணைக்கவும்) :----.

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள தகவல் உண்மையானதும், பிழையற்றதும் என்றும் என்னால் உறுதிமொழிகின்றேன். இங்குள்ள தகவல்கள் உண்மையற்றதும், பிழையானதும் என்றும் இந்த பதவிக்கு தேர்ந்தெடுப்பதற்கு முன் தெரியவரின் நான் தகுதியற்றவர் என்றும், தேர்ந்தெடுக்கப்பட்ட பின் தெரியவரின் எவ்வித நட்டஈடும் இன்றி சேவையில் இருந்து விலக்குவதற்கு கீழ்படிகின்றேன் என்றும் எனக்குத் தெரியும்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ் (தற்போது சேவையில் உள்ளவர்களுக்கு மாத்திரம்)**

திரு./திருமதி/செல்வி ......................................... இந்த நிறுவனத்தில் தற்போது ................... ஆக நிரந்தர/அமய/நாட்சம்பளம்/ பதிலீட்டு ஒப்பந்த அடிப்படையில்/சேவை சேவையாற்றுகிறார். இந்தப் பதவிக்காக தேர்ந்தெடுக்கப்படின் அவரை தற்போதைய சேவையிலிருந்து விடுவிக்க முடியும்.

------,
திணைக்கள/நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

திகதி :----.

4-506

---

**நீர்கொழும்பு மாநகர சபை**

மேல் மாகாண அரச சேவையில் பதவிகள் வெற்றிடம்

நீர்கொழும்பு மாநகர சபையில் தற்போது வெற்றிடமாயுள்ள பின்வரும் பதவிகளுக்கு ஆட்சேர்த்துக்கொள்ளும் பொருட்டு மேல் மாகாண மாகாண சபையினுள் நிரந்தர வசிப்பாளர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் இங்கு காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய (12" × 8" அளவினதான) விண்ணப்பப்படிவத்தினை தயாரித்து விண்ணப்பிக்கும் பதவியை உரிய கடிதவுறையின் இடதுபக்க மேல் மூலையில் குறித்து 10.05.2013 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் 'மாநகர ஆணையாளர், நீர்கொழும்பு மாநகர சபை, நீர்கொழும்பு' எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

தற்போது மாகாண அரசாங்க சேவையிலுள்ளோர் தங்கள் விண்ணப்பங்களை சேவையாற்றும் தலைவர்மூலம் அனுப்புதல் வேண்டும்.

| தொடர் இல. | பதவிகள் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் | கல்வி தகைமைகள் |
|---|---|---|---|---|
| 01. | அலுவலக அலுவல் உதவியாளர் (அ. ஊ. சே. III) | 01 | பீஎல் 1-2006ஏ ஆரம்ப சம்பள நிலை ரூபா 13,060. ஏழாவது படிநிலைக்கு முன் வினைத்திறமைகாண் தடை உண்டு. | (குறிப்பு 01 ஐப் பார்க்க) |
| 02. | காவலாளி (அ. ஊ. சே. III) | 01 | பீஎல் 1-2006ஏ ஆரம்ப சம்பள நிலை ரூபா 13,060. ஏழாவது படிநிலைக்கு முன் வினைத்திறமைகாண் தடை உண்டு. | (குறிப்பு 01 ஐப் பார்க்க) |

| தொடர் இல. | பதவிகள் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் | கல்வி தகைமைகள் |
|---|---|---|---|---|
| 03. | தகனச்சாலை பொறுப்பாளர் | 01 | பீஎல் 1-2006ஏ ஆரம்ப சம்பள நிலை ரூபா 11,730. நான்காவது படிநிலைக்கு முன் வினைத்திறமைகாண் தடை உண்டு. | (குறிப்பு 02 ஐப் பார்க்க) |

**குறிப்பு 1.- அலுவலக அலுவல் உதவியாளர் மற்றும் காவலாளி பதவிகளுக்காக பூர்த்திசெய்திருக்க வேண்டிய கல்வித் தகைமைகள்** : க. பொ. த. (சா/த) பத்திரப் பரீட்சையில் ஒரே தடவையில் ஏதேனும் 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு 2.- தகனச்சாலை பொறுப்பாளர் பதவிக்காக பூர்த்திசெய்திருக்க வேண்டிய கல்வித் தகைமைகள்** : சிரேட்ட தராதரப்பத்திரப் பரீட்சையில் அல்லது க. பொ. த. (சா/த) பத்திரப் பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் மொழி/இலக்கியம், கணிதம், தாவரவியல் விஞ்ஞானம், விலங்கியல் விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் திறமை சித்திகளுடன் 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

க. பொ. த. (சா/த) பத்திரப் பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் மொழி/ இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் மற்றும் இன்னுமொரு பாடத்தில் திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

தேசிய கல்வி பொது சான்றிதழ் பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் முதலாம் மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் இன்னுமொரு பாடத்தில் திறமை சித்திகளுடன் 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

மற்றும்

பூந்தோட்டத்தை அமைத்தல், அலங்கரித்தல் மற்றும் ஊழியர்களை நிர்வகிக்கும் அறிவு மற்றும் அனுபவம் இருத்தல் வேண்டும்.

மற்றும்

விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதிக்கு முன்னர் ஆகக்குறைந்தது 3 வருடங்கள் மேல் மாகாணத்தினுள் நிரந்தர வதிவாளராக இருத்தல் வேண்டும்.

**சேவை நிபந்தனைகளும் நியதிகளும்.-**

(அ) இப்பதவிகள் நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும் ;

(ஆ) விதவைகள்/தபுதாரிகள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு அங்கத்துவ பணம் செலுத்தல் வேண்டும் ;

(இ) இப்பதவிக்கு நியமனம் பெற்றோர் 3 வருட கால நன்னடத்தைக் காலத்திற்கு உட்பட்டவராவர். இக்காலத்திற்குள் வேலை, வருகை மற்றும் நடத்தை திருப்திகரமானதாக இருக்குமாயின், நன்னடத்தை கால இறுதியில் நிரந்தரமாக்கப்படுவர். ஏற்கனவே அரச சேவையில்/மாகாண அரச சேவையில் நிரந்தர பதவி வகிப்போர் 1 வருட பதிற் கடமையாற்றும் பதவியில் வைக்கப்படுவர்.

**ஏனைய பொது நிபந்தனைகள்.-** 1. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் திகதிக்கு 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க, மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர ஊழியருக்கு இவ்வயதெல்லை ஏற்புடைத்தாகாது.) ;

2. விண்ணப்பதாரிகள் பரம்பரையாகவோ அல்லது பதிவின் மூலமாகவோ இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

3. விண்ணப்பதாரிகள் சிறந்த நடத்தையும் நல்ல தேகாரோக்கியமுடையவராகவிருத்தல் வேண்டும். இப்பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டால் ஒரு மாத காலத்திற்குள் அரச வைத்தியர் ஒருவரினால் நடாத்தப்படும் வைத்திய பரிசோதனைக்கு தோற்றுதல் வேண்டும் என்பதுடன் அப்பரிசோதனையில் உடல்நலம் குன்றியவராக தெரியவரின் நியமனம் இரத்துச்செய்யப்படும் ;

4. தண்டச் சட்டக்கோவையின்கீழ் நீதிமன்றில் தண்டனை பெற்றவராக இருத்தல் கூடாது ;

5. விண்ணப்பம் கோரும் திகதியன்று தொடர்ச்சியாக மூன்று வருட கால மேல் மாகாணத்திற்குள் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

6. அரச மற்றும் மாகாண அரச சேவையிலிருந்து வெளியேற்றப்பட்டவராக இருத்தல் கூடாது என்பதுடன் மாகாண அரச நிருவாக சுற்றறிக்கை இல. 44/90 இன் கீழ் ஓய்வுபெற்றவராகவோ இருத்தலும் கூடாது.

**ஆட்சேர்த்துக்கொள்ளும் விதம்**.- (1) அலுவலக அலுவல் உதவியாளர் மற்றும் காவலாளி ஆகிய பதவிகளுக்கான விண்ணப்பங்களில் தகைமைபெற்றுள்ள விண்ணப்பதாரிகள் பொது நிருவாக சுற்றறிக்கை இல. 24/95 இற்கமைய சட்டமுறையான நேர்முகப் பரீட்சையின்மூலம் தேர்ந்தெடுக்கப்படுவர்.

(2) தகனச்சாலை பொறுப்பாளர் பதவிக்கு தகைமை பெற்றவர்கள் பொத நிருவாக சுற்றறிக்கை இல. 15/90 இற்கமைய பொது விவேகப் பரீட்சைக்கான 1 மணித்தியால வினாப்பத்திரம் மற்றும் பொது அறிவு பரீட்சைக்கான 45 நிமிட வினாப்பத்திரத்திற்கு தோற்றிய பெறுபேறுகளின் திறமையின் முன்னுரிமையின்மீது ஆட்சேர்த்துக்கொள்ளப்படுவர்.

மாநகர ஆணையாளர்,
நீர்கொழும்பு மாநகர சபை.

நீர்கொழும்பு மாநகர சபை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**நீர்கொழும்பு மாநகர சபை**

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

.......................................... பதவி

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :-----.
2. முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர் :-----.
3. தேசிய அடையாள அட்டை :-----.
4. நிரந்தர விலாசம் :-----.
5. தபால் விலாசம் :-----.
6. நிரந்தரமாக வசிக்கும் மாவட்டம் :-----.
7. நிரந்தரமாக வசிக்கும் பிரதேச செயலாளர் பிரிவு :-----.
8. நிரந்தரமாக வசிக்கும் உள்ளூராட்சி நிறுவனத்திற்கான அதிகார பிரதேசம் :-----.
9. பிறந்த திகதி :-----.
10. விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது :-----.
11. கல்வித் தகைமைகள் :-----.
12. அனுபவங்கள் :-----.
13. தொழில்சார் தகைமைகள் :-----.
14. ஏனைய தகைமைகள் :-----.
15. நீங்கள் நீதிமன்றினால் குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளீரா? :-----.

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் உண்மையானதும் பிழையற்றதும் என வெளிப்படுத்துகிறேன். இங்கு ஆட்சேர்த்துக்கொள்ளும் நிபந்தனைகளுக்கமைய என்னால் தரப்பட்டுள்ள பொய்யான தகவல்கள் நிரூபிக்கப்படுமிடத்து நியமனத்திற்கு முன்னராயின் தகைமையற்றவனாவேன் எனவும் நியமனத்தின் பின்னராயின் பதவி நீக்கத்திற்கு ஆட்படுவேன் எனவும் நான் அறிவேன்.

.......................................................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

**விண்ணப்பதாரி தற்போது அரச சேவையில் பதவி வகிப்பாராயின், திணைக்களத்/நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

விண்ணப்பதாரியான திரு./திருமதி/செல்வி .................................................................................... தற்போது இத்திணைக்களத்தில்/ நிறுவனத்தில் ............................................................... ஆக சேவையாற்றுகிறார். மேலே குறிப்பிட்டுள்ள பதவிக்கு நியமிக்கப்படுவாராயின், அவரை இச்சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது. அவர் எவ்விதத்திலும் சட்டத்திற்குட்பட்ட தண்டனைக்கு (எச்சரிக்கை தவிர்ந்த) ஆளாகவில்லை என இத்தால் சான்றுபடுத்துவதுடன் விண்ணப்பப்படிவத்தை சிபார்சு செய்து சமர்ப்பிக்கிறேன்.

.......................................................,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :-----.
பதவி :-----.
திணைக்களம்/நிறுவனம் :----.
(பதவி முத்திரை இடவும்)
திகதி :-----.

4-714

## பாத்ததும்பற பிரதேச சபை

*மத்திய மாகாண அரச சேவையின் பாத்ததும்பற பிரதேச சபையின் பதவி வெற்றிடங்களை நிரப்புதல்*

*பாத்ததும்பற பிரதேச சபையில் நிலவும் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள பதவிகளின் ஆட்சேர்ப்புக்காகப் பின்வரும் தகைமைகளைக் கொண்டுள்ள பாத்ததும்பற பிரதேச சபையின் எல்லைக்குள் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

| தொடர் இல. | பதவிப் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | சம்பளத்திட்டம் | கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|---|
| 1 | வாகன ஓட்டுநர் தரம் III | 02 | 06/2006 (IV- P.L.3 2006A ரூபா 12,470 -130×10 -145×10 - 160×10 - 170 ×12 - ரூபா18,860 | இரு தடவைக்கு மேற்படாது க. பொ. த. (சா. த.) பரீட்சையில் அல்லது தேசிய கல்விச் சான்றிதழ் பரீட்சையில் (சா. த.) சிங்களம், தமிழ்மொழி உட்படக் குறைந்தது ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். (தெரிவுக்குரிய பாடங்கள் அல்லாத),<br>மற்றும்<br>மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளரால் வழங்கப்பட்ட வாகன ஓட்டுநருக்கான தகைமைச் சான்றிதழ், (மோட்டார் கோச் வண்டி கனரக வாகன ஓட்டுநர் அனுமதிப்பத்திரம்)<br>அல்லது<br>C - லொறி<br>CI - பல்கரும வாகனம்<br>D - பஸ் வண்டி<br>DI - மோட்டார் வான்<br>G - திராக்டர்<br>செலுத்துவதற்கான தேர்ச்சிச் சான்றிதழ் பெற்றிருத்தல்<br>மற்றும்<br>திராக்டர் வண்டி செலுத்தும் அனுபவம் பெற்றிருப்போருக்கு முன்னுரிமை வழங்கப்படும். |
| 2 | மின் தொழில்நுட்ப ஊழியர் தரம் - III | 01 | பி. எல். 2-2006ஏ ரூபா 12,470 -10×130 -10×145 - 12×160 - 12×170 - ரூபா 18,860 | இரு தடவைக்கு மேற்படாது க. பொ. த. (சா. த.) பரீட்சையில் அல்லது தேசிய கல்விச் சான்றிதழ் பரீட்சையில் (சா. த.) சிங்களம், தமிழ்மொழி உட்படக் குறைந்தது ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். (தெரிவுக்குரிய பாடங்கள் அல்லாத).<br>(அ) தொழிலுக்குரிய தேசிய தொழிற் தகைமை 2 ஆம் மட்டம் (NVQ 2) அல்லது 3 ஆவது மட்ட (NVQ 3) சான்றிதழ் பெற்றிருத்தல்.<br>அல்லது<br>(ஆ) தொழில்நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்களத்தின் (DTET) தொழிலுக்கான ஒரு வருடத்துக்குக் குறைவில்லாத பாடநெறியைப் பயின்ற சான்றிதழ் பெற்றிருத்தல்<br>அல்லது |

| தொடர் இல. | பதவிப் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | சம்பளத்திட்டம் | கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|---|
| | | | | (இ) தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் (NYSC) தொழிலுக்கான ஒரு வருடத்துக்குக் குறைவில்லாத பாடநெறியைப் பயின்ற சான்றிதழ் பெற்றிருத்தல்.<br><br>(ஈ) இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையில் (VTA) தொழிலுக்கான ஒரு வருடத்துக்குக் குறைவில்லாத பாடநெறியைப் பயின்ற சான்றிதழ் பெற்றிருத்தல்.<br><br>அல்லது<br><br>தேசிய தொழில் பயிலுநர் மற்றும் தொழில்நுட்ப பயிற்சித் திணைக்களத்தில் (NAITA) தொழிலுக்கான ஒரு வருடத்துக்கான பாடநெறியைப் பயின்ற சான்றிதழ் பெற்றிருத்தல்.<br><br>அல்லது<br><br>மூன்றாம் நிலை மற்றும் தொழில்கல்வி ஆணைக்குழுவில் பதிவுபெற்ற தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனமொன்றில் தொழிலுக்கான ஒரு வருடத்துக்குக் குறைவில்லாத பாடநெறியைப் பயின்ற சான்றிதழ் பெற்றிருத்தல்<br><br>அத்துடன்<br><br>தெருவிளக்குகள் பொருத்துவதில் மின்சார சபையின அல்லது உரிய துறையின் அனுபவச் சான்றிதழ் பெற்றிருத்தல் அல்லது மின்சார சபை அல்லது அதுபோன்ற நிறுவனங்களில் பணியாற்றியிருப்போர் தொடர்பில் முன்னுரிமை வழங்கப்படும். |
| 3 | ஆயுர்வேத மருந்துக் கலவையாளர் தரம் III | 01 | பி.எல். 2-2006ஏ ரூபா 12,210 -10×130 -10×145 - 10×160 -12×170 - ரூபா 18,860 | இருதடவைக்கு மேற்படாது க. பொ. த. (சா. த.) பரீட்சையில் அல்லது தேசிய கல்விச் சான்றிதழ் பரீட்சையில் (சா. த.) சிங்களம்/தமிழ்மொழி உட்படக் குறைந்தது ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். (தெரிவுக்குரிய பாடங்கள் அல்லாத),<br><br>மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழில்நுட்ப பயிற்சித் திணைக்களத்தில் (NAITA) தொழிலுக் கான ஒரு வருடத்துக்குக் குறைவில்லாத பாட நெறியைப் பயின்ற சான்றிதழ் பெற்றிருத்தல்.<br><br>அத்துடன்<br><br>தொழிலுக்குரிய துறையில் 2 வருடகால அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். |
| 4 | நூலக உதவியாளர் தரம் III | 04 | பி. எல். 1-2006ஏ ரூபா 11,730 -10 ×120 -10 ×130 - 10 ×145 - 12 ×160 - ரூபா 17,600 | அரசாங்கப் பாடசாலையொன்றில் தரம் 8 இல் (ஆண்டு 9 இல்) சித்தியடைந்திருத்தல் வேண்டும். |

| தொடர் இல. | பதவிப் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | சம்பளத்திட்டம் | கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|---|
| 5 | வீதித் தொழிலாளர்கள் III ஆம் வகுப்பு | 01 | பி. எல். 1-2006ஏ ரூபா 11,730 -10 ×120 -10 ×130 - 10 ×145 - 12 ×160 - ரூபா 17,600 | அரசாங்கப் பாடசாலையொன்றில் தரம் 8 இல் (ஆண்டு 9 இல்) சித்தியடைந்திருத்தல் வேண்டும். |
| 6 | சுகாதாரத் தொழிலாளர்கள் III ஆம் வகுப்பு | 07 | பி. எல். 1-2006ஏ ரூபா 11,730 -10 ×120 -10 ×130 - 10 ×145 - 12 ×160 - ரூபா 17,600 | அரசாங்கப் பாடசாலையொன்றில் தரம் 8 இல் (ஆண்டு 9 இல்) சித்தியடைந்திருத்தல் வேண்டும். |

02. **ஆட்சேர்ப்புக்கான பொது நிபந்தனைகள்.-**

(1) விண்ணப்பதாரிகள் வம்சாவழியாகவோ அல்லது பதிவினாலோ இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(2) விண்ணப்பதாரிகள் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதிக்கு முன்னரான 03 வருட காலம் பாத்ததும்பற பிரதேச சபையின் எல்லைக்குள் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

(3) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரச அல்லது ஏதும் மாகாண அரச சேவையில் உள்ளோருக்கு இந்த வயதெல்லை பொருந்தாது).

(4) மேற்காட்டிய ஒவ்வொரு பதவிக்கும் உரிய ஆகக்குறைந்த தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(5) ஆட்சேர்ப்பு முறைகளுக்கமைய முறையான நேர்முகப்பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டுப் பெற்றுக்கொண்ட உயர்மட்டப் புள்ளிகளின் அடிப்படையில் தகுதியானோர் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

(6) வாகன ஓட்டுநர் பதவிக்கென மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளரால் நடத்தப்படும் செயன்முறைப் பரீட்சைக்கும், அவரால் மேற்கொள்ளப்படும் வீதிப் போக்குவரத்து விதிகள் பற்றிய வாய்மொழிப் பரீட்சைக்கும் தோற்றுதல் வேண்டும்.

(7) இந்த விண்ணப்பங்கள் கோரப்பட்டதன் பின்னர் அல்லது அதற்கிடையில் இந்த ஆட்சேர்ப்பைத் தாமதப்படுத்தும், மாற்றியமைக்கும் அல்லது அறிவிப்பைத் திருத்தும், இரத்தும் செய்யும் அனைத்து அதிகாரங்களும் பாத்ததும்பற பிரதேச சபையின் செயலாளருக்கு உண்டு.

(8) ஏற்கனவே பாத்ததும்பற பிரதேச சபையில் சேவையாற்றுவோர் தமது நிறுவனத் தலைவரூடாகத் தமது விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.

03. **பொது நிபந்தனைகள்.-**

1. பாத்ததும்பற பிரதேச சபையில் தற்பொது பணியாற்றும் ஆட்சேர்ப்புக்கான தகைமைகளைக் கொண்டுள்ளோர் மீது விசேட கவனம் செலுத்தப்படும்.

**குறிப்பு.-** வெற்றிடங்களை நிரப்புவதற்குப் போதுமான விண்ணப்பங்கள் நிருவாகப் பிரதேசத்துக்குள் கிடைக்காத பட்சத்தில் அண்மித்த உள்ளூராட்சி நிருவாகப் பிரதேசங்களது விண்ணப்பங்கள் கருத்திற்கொள்ளப்படும்.

04. **ஆட்சேர்ப்புக்கான நியதிகள்.-**

(1) இந்தப் பதவிகள் நிரந்தரமானவை. ஓய்வூதியம் கொண்டவை.

(2) விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்கு உரிய வகையில் பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

(3) தெரிவுசெய்யப்படுவோர் மூன்று வருட கால தகுதிகாண் சேவைக்கு உட்படுவர் அக்காலத்துக்குள் கடமை, வரவு மற்றும் நடத்தை திருப்தியாக அமைந்தால் தகுதிகாண் கால இறுதியில் சேவையில் நிரந்தரமாக்கப்படுவர்.

(4) அரசாங்க மொழிகள் கொள்கைகளைச் செயற்பத்துவதற்கென விசேடமாக அரசகரும மொழிகள் சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கெனத் தற்போது தயாரிக்கப்பட்டுள்ள மற்றும் எதிர்காலத்தில் தயாரிக்கப்படவுள்ள ஏற்பாடுகளுக்கும் இணங்கச் செயற்படுதல் வேண்டும்.

(5) இந்த ஆட்சேர்ப்பு நிபந்தனைகளுக்கும் நியதிகளுக்கும் மேலதிகமாக தாபனக் கோவை நிபந்தனைகளுக்கும், மத்திய மாகாண சபையின் நிதிப் பிரமாணங்களுக்கும், மத்திய மாகாண சபை அல்லது மத்திய மாகாண அரச சேவை ஆணைக்குழு மற்றும் பாத்ததும்பற பிரதேச சபை ஆகியவற்றால் காலத்துக்குக்காலம் விதிக்கும் கட்டளைகளுக்குமமைய செயற்படுவதற்கு உட்படுதல் வேண்டும்.

(6) விண்ணப்பதாரிகள் அனைவரும் சிறந்த நன்னடத்தை உடையவராகவும், நல்ல தேகாரோக்கியம் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும். தெரிவு செய்யப்பட்டால் ஒரு மாத காலத்துக்குள் அரசாங்க மருத்துவர் ஒருவரால் நடத்தப்படும் மருத்துவ பரிசோதனையின்போது உடற்தகைமை பொருத்தமற்றது எனக் காணப்பட்டால் நியமனம் இரத்துச் செய்யப்படும்.

(7) குற்றவியல் சட்டக்கோவையின் கீழ் நீதிமன்றம் ஒன்றின் மூலம் குற்றவாளியாகக் கருதப்பட்டவராக இருத்தல் கூடாது.

(8) அரச அல்லது உள்ளூராட்சி சேவையிலிருந்து பதவிநீக்கம் செய்யப்பட்டவராக அல்லது பொது நிருவாக சுற்றறிக்கை 44/90 இன் கீழ் ஓய்வு பெற்றவராக இருத்தல் கூடாது.

05. **விண்ணப்பிக்கவேண்டிய முறை.**- இந்த அறிவித்தலில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்துக்கமைய 8.27" × 11.69" (A4) அளவுத் தாளில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2013.05.15 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கும் வண்ணம் "செயலாளர், பாத்ததும்பற பிரதேச சபை, பிட்டியேகெதர, வத்தேகம" என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். தபாலில் காணாமற்போகும் அல்லது பிழையாக முகவரியிடப்பட்டுத் திருப்பியனுப்பப்படும் விண்ணப்பங்கள் தொடர்பில் பொறுப்பேற்கப்படமாட்டாது. உரிய காலத்துக்குள் கிடைக்காத மற்றும் பூரணமற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பப்படிவத்துடன் பின்வரும் ஆவணங்களது உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை அனுப்பிவைத்தல் வேண்டும்.

(1) பிறப்புச் சான்றிதழ் ;
(2) தேசிய அடையாள அட்டை ;
(3) கல்வித் தகைமைச் சான்றிதழ்கள் ;
(4) தமது நிரந்தர வதிவிடத்துக்குரிய கிராம அலுவலர் வழங்கிய, பிரதேச செயலாளர் உறுதிப்படுத்திய வதிவிடச் சான்றிதழ் ;
(5) தொழிற் தகைமைகளைக் காட்டும் சான்றிதழ்கள் ;
(6) சேவை அனுபவச் சான்றிதழ்கள் ;
(7) அண்மையில் பெறப்பட்ட குணநலச் சான்றிதழ்.

செயலாளர்,
பாத்ததும்பற பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
பாத்ததும்பற,
2013.04.08.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**பாத்ததும்பற பிரதேச சபை**

மத்திய மாகாண அரச சேவையின் பதவி வெற்றிடங்கள்

................................ பதவி

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் :----.
2. நிரந்தர முகவரி :----.
3. பிறந்த திகதி:
வருடம் :----, மாதம் :----, திகதி :----.
4. விண்ணப்ப இறுதித் திகதியில் உள்ளவாறான வயது :
வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.
5. விவாகமானவர்/தனித்தவர் :----.
6. இனம் :----.
7. நீர் இலங்கைப் பிரசையா ? :----.
அவ்வாறாயின் பிறப்பினாலா அல்லது பதிவினாலா ? :----.
8. கல்வித் தகைமைகள் :
க. பொ. த. (சா. த.)
சித்தியடைந்த வருடம் :----. சுட்டெண் :----.

| பாடம் | சித்தி | பாடம் | சித்தி |
|---|---|---|---|
| 1. | | 5. | |
| 2. | | 6. | |
| 3. | | 7. | |
| 4. | | 8. | |

9. (1) ஏனைய தகைமைகள் :----.
(2) தொழிற் தகைமைகள் :----.
(3) சேவை அனுபவம் :----.
(4) கல்வித் தகைமைகளதும் ஏனைய தகைமைகளதும் சான்றிதழ்களை உறுதிப்படுத்துவதற்கென அவற்றின் பிரதிகளை விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும் :----.

10. நீங்கள் எப்போதாயினும் நீதிமன்றத்தினால் குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளீரா ? :----.

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் அனைத்தும் நான் அறிந்த வரையில் உண்மையானவையெனவும் சரியானவை எனவும் உறுதியுரைக்கின்றேன். இங்கு தரப்பட்டுள்ள விடயங்களுள் ஏதேனும் பொய்யானவை என நிரூபிக்கப்பட்டால், நியமனத்துக்கு முன்னரெனின் நான் தகுதியற்றவனாக ஆக்கப்படுவேன் என்பதையும், நியமனத்தின் பின்னரெனின், நட்டஈடு எதுவுமின்றி பதவி நீக்கம் செய்யப்படுவதற்கு உட்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**திணைக்களத் தலைவரது சான்றிதழ்**
**(தற்போது சேவையில் உள்ளவர்களுக்கு மட்டும்)**

விண்ணப்பதாரி திரு./திருமதி/செல்வி ......................................... தற்போது இங்கு ................... ஆக நிரந்தர/அமய/நாட்சம்பள/பதிலீட்டு/ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றுகின்றார். அவர் தெரிவு செய்யப்பட்டால் தற்போதைய பதவியிலிருந்து அவரை விடுவிக்க முடியும்/முடியாது.

------,
திணைக்களத் தலைவரது கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
திகதி :----.

4-792

---

**ஹட்டன் - டிக்கோயா நகர சபை**

ஹட்டன் டிக்கோயா நகர சபையில் வெற்றிடமாகியுள்ள கீழ்க்காணும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் தகுதியான விண்ணப்பதாரர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

| தொடர் இல. | பதவிப் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | சம்பளத்திட்டம் | கல்வித் தகைமைகள் மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|
| 01 | அலுவலக உதவியாளர் | 01 | ரூபா 11,730 -10×120 -10×130 - 10×145- 12 ×160 - ரூபா17,600 (அ. நி. சு. 6/2006 (IV) P.L.1-2006 (A) ) சம்பள அளவின் 1 ஆம் நிலை ஆரம்ப சம்பள நிலையாகக் கருதப்படும். (4 ஆவது சம்பள நிலையைக் கடக்கும் முன் வினைத் திறமை காண் தடை தாண்டல் உண்டு.) | க. பொ. த. (சா. த.) பரீட்சைகளில் இரு தடவைகளுக்கு மேற்படாதவாறு சிங்களம் அல்லது தமிழ் மொழி உட்பட குறைந்தது ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். |
| 02 | லொறி/ டிரக்டர் சாரதி | 01 | ரூபா 12,470 -10×130 -10×145 - 10×160- 12 ×170 - ரூபா18,860 (அ. நி. சு. 6/2006 (IV) P.L.3-2006 (A) ) சம்பள அளவின் 1 ஆம் நிலை ஆரம்ப சம்பள நிலையாகக் கருதப்படும். (4 ஆவது சம்பள நிலையைக் கடக்கும் முன் வினைத் திறமை காண் தடை தாண்டல் உண்டு.) | 8 ஆம் தரம்/9 ஆம் ஆண்டு சித்தி பெற்றிருத்தல் வேண்டும். மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளரினால் வழங்கப்பட்ட நிபுணத்துவ சான்றிதழ் மற்றும் வாகனச் சாரதியாக 03 வருட அனுபவம் இருத்தல் வேண்டும். (சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்.) ஆகக்குறைந்தது 5 அடி உயரம் இருத்தல் வேண்டும். சிறந்த கண் பார்வை இருத்தல் வேண்டும். நெடுஞ்சாலை சட்ட விதிக் கோவை பற்றிய சிறந்த அறிவு இருத்தல் வேண்டும். |

| தொடர் இல. | பதவிப் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | சம்பளத்திட்டம் | கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|---|
| 03 | வேலை பிரிவு தொழி லாளிகள் | 02 | ரூபா 11,730 -10×120 -10×130 - 10×145- 12 ×160 - ரூபா17,600 (அ. நி. சு. 6/2006 (IV) P.L.1-2006 (A) சம்பள அளவின் 1 ஆம் நிலை ஆரம்ப சம்பள நிலையாகக் கருதப்படும். (4 ஆவது சம்பள நிலையைக் கடக்கும் முன் வினைத் திறமை காண் தடை தாண்டல் உண்டு.) | 08 ஆம் தரத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். |
| 04 | சுகாதார தொழிலாளி | 09 | ரூபா 11,730 -10×120 -10×130 - 10×145- 12 ×160 - ரூபா17,600 (அ. நி. சு. 6/2006 (IV) P.L.1-2006 (A) சம்பள அளவின் 1 ஆம் நிலை ஆரம்ப சம்பள நிலையாகக் கருதப்படும். (4 ஆவது சம்பள நிலையைக் கடக்கும் முன் வினைத் திறமை காண் தடை தாண்டல் உண்டு.) | 08 ஆம் தரத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். |

**பொதுவான தகைமைகள்.-**

(1) விண்ணப்பதாரி பரம்பரையில் அல்லது பதிவு செய்ததன் பிரகாரம் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(2) விண்ணப்பதாரி ஹட்டன் டிக்கோயா நகர சபையின் எல்லைக்குள் கடந்த 03 வருட காலத்திற்குள் நிரந்தரமாக வசித்தவராக இருத்தல் வேண்டும். (வாக்குரிமை பெயர் பட்டியல் மூலமாக அல்லது பிரதேச செயலகத்தில் வழங்கப்பட்ட சான்றிதழ் மூலம் வதிவிடத்தை உறுதி செய்தல் வேண்டும்.) ஹட்டன் டிக்கோயா நகர சபையில் தற்போது நிரந்தர/அமைய/பதில்/தற்காலிக/ஒப்பந்த/மதிப்பீடு அடிப்படையில் சேவை செய்யும் சேவையாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(3) நன்னடத்தையுடன் கூடிய சுகதேகியாக இருத்தல் வேண்டும்.

(4) விண்ணப்பப்படிவத்தை பொறுப்பேற்கும் இறுதித் திகதிக்கு வயது 18ஐ விட குறையாது 45 வயதுக்கு மேற்படாத வகையில் இருத்தல் வேண்டும். (தற்போது சேவையில் இருப்பவருக்கு வயது எல்லை கருத்தில் எடுக்கப்படாது. ஆனால் பதவிக்கு சேர்த்து கொள்ளும் திகதிக்கு குறிப்பிட்ட வயது எல்லைக்குள் இருத்தல் வேண்டும்.)

(5) விண்ணப்பதாரி குற்றவியல் சட்ட கோவையின் கீழ் நீதிமன்றம் ஒன்றினால் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளவராகவோ அரசாங்க மாகாண சேவையில் நீக்கப்பட்டவராகவோ இருக்கக்கூடாது.

(6) சேவையின் தேவைக்கமைய முறையான நேர்முக பரீட்சையின் மூலம் தகைமையாளர்கள் தேர்ந்தெடுக்கப்படும்.

(7) விண்ணப்பம் கோரப்பட்ட பின் அல்லது கோரப்பட்ட கால எல்லைக்குள் அல்லது சேர்த்துக்கொள்ள தாமதாவது அல்லது திருத்தப்படுவது அல்லது இவ்வறிவித்தலை நிராகரிப்பது அல்லது திருத்துவது ஹட்டன் டிக்கோயா நகர சபையின் செயலாளருக்குரியதாகும்.

(8) யாதேனும் சந்தர்ப்பத்தில் குறித்த தகுதியினை கொண்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லாதவிடத்து ஹட்டன் டிக்கோயா நகர சபையில் தற்போது நிரந்தர/அமைய/பதில்/தற்காலிக/ஒப்பந்த/மதிப்பீடு அடிப்படையில் சேவை செய்யும் விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதுடன், அது சம்பந்தமாக நேர்முகப் பரீட்சை குழுவினால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதித் தீர்மானமாக கருதப்படும்.

**சேர்த்துக்கொள்ளும் முறை.-**

1. நேர்முக பரீட்சை மூலம் தேர்ந்தெடுக்கப்படுவர்.
2. குறிப்பிட்ட தகைமைகள் பூர்த்தி செய்தவர்களை மாத்திரம் நேர்முக பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

**சேவை நிபந்தனைகள்.-**

(1) இப்பதவிகள் நிரந்தரமானதும். ஓய்வூதியம் உள்ளதுமாகும்.

(2) விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதிக்கு பங்களிப்புச் செலுத்துதல் வேண்டும்.

(3) தெரிவுசெய்யப்படுபவர்களின் பதவி மூன்று வருட காலத்திற்கு தகுதிகாண் நிலைக்கு உட்படுவதுடன் அம் மூன்று வருட இறுதியில் சேவை, வருகை, ஒழுக்கம் உயர் நிலையில் இருக்கும் சேவையாளர்களுக்கு மாத்திரம் பதவி நிரந்தரமாக்கப்படும்.

(4) இச்சேர்த்துக்கொள்ளல் இலங்கை குடியரசின் தபானக் கோவையின் சட்டத்திட்டங்களுக்கும் நிதி சட்டத்திட்டங்களுக்கும் திணைக்கள கட்டளைக்கும் அரச அல்லது மத்திய மாகாண சபையினால் அவ்வப்போது வெளியிடப்படும் ஏனைய சட்டங்கள் கட்டளைகளுக்கு அமைய செயல்பட சகல சேவையாளர்களும் உடன்பட்டிருத்தல் அவசியம்.

**விண்ணப்பம் கோரப்படும் முறை**.- விண்ணப்பதாரர் இங்கு குறிப்பிட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தின் படி A4 அளவிலான கடதாசியில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை 15.05.2013 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் "செயலாளர், ஹட்டன் டிக்கோயா நகர சபை, ஹட்டன் என்ற முகவரிக்கு பதிவு தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவி "..............." என்று குறிப்பிடப்படல் வேண்டும். பூர்த்தியற்ற விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படுவதுடன் குறிப்பிட்ட திகதிக்கு பின் கிடைக்கும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும். விண்ணப்பம் கோரப்பட்ட பின் அல்லது கோரப்பட்ட கால எல்லைக்குள் அல்லது சேர்த்துகொள்ள தாமதமாவது அல்லது திருத்தப்படுவது அல்லது இவ் அறிவித்தலை நிராகரிப்பது அல்லது திருத்துவது போன்ற முழு அதிகாரமும் ஹட்டன் - டிக்கோயா நகர சபையின் செயலாளருக்குரியதாகும்.

கே. ஏ. பி. குலசூரிய,
செயலாளர்,
ஹட்டன் டிக்கோயா நகர சபை.

நகர சபை அலுவலகம்,
ஹட்டன் - டிக்கோயா,
*2013*, ஏப்பிறல் *08*.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**ஹட்டன் - டிக்கோயா நகர சபை**

................................ பதவி

1. விண்ணப்பதாரரின் பெயர் (முதலெழுத்துடன் பெயர்) :----.
2. முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர் :----.
3. அஞ்சல் முகவரி :----.
4. தொலைபேசி இலக்கம் :-----.
5. பிறந்த திகதி:
   ஆண்டு :----, மாதம் :----, திகதி :----.
6. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.
7. விண்ணப்பத்தை பொறுப்பேற்கும் இறுதித் திகதியில் வயது :
   வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.
8. ஆண்/பெண் விபரம் :-----.
9. விவாகமானவரா/விவாகமாகாதவரா :----.
10. இனம் :----.
11. நீங்கள் இலங்கை பிரசையா? அவ்வாறாயின் பரம்பரையில் அல்லது பதிவு செய்ததின் பிரகாரமா? :----.
12. கல்வி தகைமைகள் :----.
13. தொழில் பயிற்சி அனுபவம் :----.
14. நீங்கள் தற்போது நுவரெலியா பிரதேச சபையில் சேவை செய்பவராயின் :----.
    (i) தற்போது வகிக்கும் பதவி :----.
    (ii) அப்பதவிக்கு நியமனம் பெற்ற திகதி :----.
    (iii) அப்பதவியின் தன்மை (நிரந்தர/அமைய/தற்காலிக/பதில்/ஒப்பந்த/மதிப்பீடு/அடிப்படையிலா?) :----.
15. நீங்கள் எப்போதாவது குற்றச்சாட்டுக்காக நீதிமன்றத்தில் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ளவரா? :----.

இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள விடயங்கள் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் சரியானவை என என்மீது ஆணையாக வெளிப்படுத்துகின்றேன். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏதேனும் பிழையானதென இப்பதவிக்கு தேர்ந்தெடுக்கும் முன் தெரிய வந்தால் நான் தகுதி அற்றவர் எனவும், நியமனம் கிடைத்தபின் அவ்வாறான விடயம் நிரூபிக்கப்பட்டால் எவ்வித நட்டஈடும் இன்றி பதவியலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுவேன் என நான் அறிவேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**தற்போது அரச சேவையில் இருக்கும் விண்ணப்பதாரர்களுக்கான நிர்வாக அதிகாரியின் சான்றிதழ்**

அவ்விண்ணப்பதாரி திரு./திருமதி/செல்வி ......................................... இந்நிறுவனத்தில் ................... ஆக சேவையில் உள்ளார். இப்பதவிக்காக தேர்ந்தெடுக்கப்பட்டால் அவரை இச்சேவையில் இருந்து விடுவிக்க முடியும்/முடியாது எனவும் அவர் எவ்வித தண்டனைக்கும் உட்படவில்லை என இத்தால் சான்றுப்படுத்துவதுடன் விண்ணப்பப்படிவத்தை சிபாரிசு செய்து சமர்ப்பிக்கின்றேன்.

------,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
பதவிக்கான முத்திரை :----.

*4-847*

திருத்தம்

**பாத்தஹேவாஹெட்ட பிரதேச சபை**

திருத்துதல்

பதவிகளுக்கான வெற்றிடங்களை மீள் நிரப்புவதற்காக ஆட்சேர்த்தல்

*2013.03.08 ஆந் திகதியிலான 1801 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிட்ட பதவிகளுக்கான வெற்றிடங்களை மீள் நிரப்புவது தொடர்பான விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதி தினம் 2013.05.23 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளமை இதன் மூலம் அறியத்தரப்படுகின்றது.*

சீ. தெலும்கஹவத்த,
செயலாளர்,
பாத்தஹேவாஹெட்ட பிரதேச சபை.

*2013.04.17.*

*4-864*

---

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

**கல்முனை மாநகர சபை**

ஊன்வினைஞர்கள் கட்டளைச்சட்டத்தின் 7(20 அம் பிரிவின் கீழான அறிவித்தல்

மருதமுனை - 03, ஹிஜ்ரா வீதி, 552A என்னுமிடத்தைச் சேர்ந்த முகைதீன்பாவா அப்துல் ஜவாத் என்பவர், மருதமுனை பிரதான வீதி, மக்கள் மண்டபத்திற்கு அருகில் இறைச்சிக்கடைக்காரர் தொழிலை நடாத்திச் செல்லும் பொருட்டு (272 ஆம் அத்தியாயமான) ஊண்வினைஞர்கள் கட்டளைச்சட்டத்தின் கீழ் அனுமதிப்பத்திரம் ஒன்றைக் கோரி விண்ணப்பம் ஒன்றைச் செய்துள்ளார்.

இவ்வனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு கல்முனை மாநகர சபை எல்லைக்குள் வசிக்கும் எவரும் எதிர்ப்புத் தெரிவிக்க விரும்பினால், அவ்வாறு எதிர்ப்புதெரிவிப்பதற்கான காரணங்களை எழுத்தில் இரு பிரதிகளில் தயாரித்து இவ்வறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் தினத்திலிருந்து பதினான்கு தினத்திற்குள் எனக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

இவ்வறிவித்தலானது (272) ஆம் அத்தியாயமான) ஊன் வினைஞர்கள் கட்டளைச்சட்டத்தின் 7(2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படுகின்றது.

கலாநிதி சிராஸ் மீராசாஹிப்,
கல்முனை மாநகர முதல்வர்.

*4-673*

---

**கல்முனை மாநகர எல்லைக்குள் கழிவகற்றல் சேவைக் கட்டணங்களை அறவிடல் சம்பந்தமான மாநநகரசபையின் தீர்மானம்**

1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூரதிகார சபைகள் (நியமத் துணை விதிகள்) சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டு 28.01.1989 ஆந் திகதிய 541/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், கிழக்கு மாகாண ஆளுனரினால் 13.08.1999 ஆம் திகதிய 1093 ஆம் இலக்க உள்ளூராட்சி வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளைமூலம் அங்கீகரிக்கப்பட்டதன் பேரில் மேற்குறிப்பிடப்பட்டுள்ள உள்ளூரதிகார சபைகள் (நியமத் துணைவிதிகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் 06.07.2002 ஆம் திகதிய 1240 ஆம் இலக்க உள்ளூராட்சி வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை மூலம் கல்முனை மாநகர சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்டதுமான துணைவிதிகளின் பாகம் XI (கழிவகற்றல் தொடர்பான துணைவிதிகள்) 4 துணைவிதியால் மாநகர சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் கீழ்வரும் அடிப் படையில் மாதாந்தக் கழிவகற்றல் கட்டணமொன்றை அறவிடுவதற்கு 2013 ஆம் ஆண்டு மார்ச்ச மாதம் 27 ஆம் திகதிய சபைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானம் மூலம் அங்கீகரிக்கப் பட்டுள்ளதென்பதை இத்தால் அறியத்தருகிறேன்.

| சேவை பெறுநரின் வகை | | மாதாந்தக் கட்டணம் |
|---|---|---|
| சமுர்த்தி உதவி பெறும் குடும்பம் | | கட்டணத்திலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளனர். |
| குடியிருப்பாளர் | | 50 0 |
| வியபார நிலையங்கள் | | |
| | A தரம் | 100 0 |
| | B தரம் | 150 0 |
| | C தரம் | 200 0 |

இக்கட்டணங்கள் யாவும் 2013 ஆம் ஆண்டு தை மாதம் 01 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வருதல் வேண்டும்.

கலாநிதி சிராஸ் மீராசாஹிப்,
மாநகர முதல்வர்,
கல்முனை மாநகர சபை.

*04-674*

## யட்டிநுவர பிரதேச சபை

ஊன் வினைஞர் கட்டளைச் சட்டம் (272 ஆவது அதிகாரம்)

பின்வரும் அட்டவணையில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளோ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் மாட்டிறைச்சி விற்பனைக்கான கடைகளை நடத்துவதற்கென 2013 ஆம் வருடத்திற்கான அனுமதிப்பத்திரம் வழங்கும்படி விண்ணப்பித்துள்ளனர். அதற்கமைய குறித்த அட்டவணையில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளோருக்குக் குத்தகை வழங்குவது தொடர்பாக யட்டிநுவர பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் வசிக்கும் எவரேனும் குறித்த அனுமதிப்பத்திரம் வழங்குவதை எதிர்ப்பதாயின், உரிய காரணங்களைக் குறிப்பிட்டு, அதனை இந்த அறிவத்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்டு 14 நாட்களில் இணைப் பிரதிகளில் பதிவுத் தபாலில் எனக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டுமென ஊண் வினைஞர் கட்டளைச் சட்டத்தின் (272 ஆவது அதிகாரத்தின்) கீழ் இத்தால் அறிவித்தல் விடுக்கின்றேன்.

எச்.எம் துசித்த குமார வலகெதர,
தலைவர்,
யட்டிநுவர பிரதேச சபை.

யட்டிநுவர பிரதேச சபை அலுவலகம்,
எம்பில்மீகம,
பிலிமத்தலாவை.
2013.03.

### அட்டவணை

| இல. | விண்ணப்பிப்பவர் பெயர் | முகவரி | வர்த்தகத்தின் தன்மை |
|---|---|---|---|
| 1 | திரு. எம். ஐ. எம். நியாஸ் | 37A/1, யஹலதன்ன, கண்டி | மாட்டிறைச்சி வர்த்தகம் |
| 2 | திரு. வீ. எம். எஸ். ஹமீட் | தெஹியங்க பள்ளி அருகில், முருத்தலாவை | மாட்டிறைச்சி வர்த்தகம் |
| 3 | திரு. ரீ. எம். மஹ்ரூப் | 144,தம்பவேஹென வீதி, யஹலதன்ன | மாட்டிறைச்சி வர்த்தகம் |
| 4 | திரு. வீ. எம். எம். ஷீது | 100/1, அமுகொட்டுவ சந்தி, தெஹியங்க வடக்கு, முருத்தலாவை | மாட்டிறைச்சி வர்த்தகம் |

4-680

---

## ஹொரொவ்பொத்தான பிரதேச சபை

கசாப்புக் கடைக்கட்டளைச் சட்டம்

2013 ஆம் ஆண்டிலிருந்து ஹொரொவ்பொத்தான பிரதேச சபைக்குச் சொந்தமான மாட்டு இறைச்சிக் கடைகளை குத்தகைக்குக் கொடுக்கப்படுகின்ற குத்தகைக்காரர்களுக்கு இறைச்சிக்காக மாடுகளை அறுப்பதற்கு தேவையான வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக ஹொரொவ்பொத்தான பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள இலக்கம் 117,சிங்ஹல வலவித்தவெவ கிராம உத்தியோகத்தர் பிரிவில் குலும்மாகட கிராமத்தின் அரச காணிக்குள் பிரதேச சபையினால் மாடுகளை அறுக்கும் மடுவத்தை நிர்மாணித்து மாடுகளை அறுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டு உள்ளது.

இது சம்பந்தமாக ஹொரொவ்பொத்தான பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் வசிக்கும் எவரேனும் ஒரு நபர் எதிர்ப்பு தரிவிப்பதாயின் அவர் அல்லது அவள் எதிர்ப்புத் தெரிவிப்பது என்ன காரணத்திற்காக என்பது பற்றி எழுத்து மூலமாக (கடிதம் மூலமாக ) இரண்டு பிரதிகளுடன இந்த அறிவித்தல் வர்த்தனியில் வெளியிடப்பட்ட திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் எனக்கு கிடைக்கக் கூடியவாறு அறிவித்தல் அனுப்புதல் வேண்டுமென்று இத்தால் அறிவிக்கப்படு கின்றது.

மேலும் இது சம்பந்தமாக நியாயமான காரணங்களுடன் எதிர்ப்பு முன் வைக்கப்படாதவிடத்து இறைச்சிக்காக மாடுகளை அறுப்பது பற்றிய கசாப்பக் கடை கட்டளைச் சட்டத்தின் (272) அதிகாரத்தின் 7(2) உறுப்புரையின் பிரகாரம் இந்தச் சபையினால் குத்தகைக்கு கொடுக்கப்படுகின்ற மாட்டு இறைச்சிக் கடைகளை குத்தகைக்கு பெற்றுக்கொள்ளும் நபர்களுக்கு இதன் பின்னர் மேலே குறிப்பிட்ட மாடுகளை அறுக்கும் மடுவத்தை பாவணைக்கு எடுத்து இறைச்சிக்காக மாடுகளை அறுத்து இறைச்சியை விற்பனை செய்வதற்கு அனுமதிப் பத்திரம் விநியோகிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று மேலும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அநுர விக்கிரமசிங்க,
தலைவர்,
ஹொரொவ்பொத்தான பிரதேசசபை.

பிரதேசசபை அலுவலகம்,
ஹொரொவ்பொத்தான,
2012, திசெம்பர் 31.

4-683

## சம்மாந்துறை பிரதேசசபை

பிரதேச சபை கட்டளைச் சட்டம் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க 134(1) இன் பிரகாரம் சம்மாந்துறை பிரதேச சபையின் 30.12.2007 ஆம் திகதி நடைபெற்ற மாதாந்த அமர்வில் 2ஆவது தீர்மானமும் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அவர்களின் ஏஎம்/எல்ஜி/பி/ஏடி/ 13 ஆம் இலக்க 2009.02.20 ஆம் திகதிய கடிதத்தில் அனுமதிக்கப்பட்ட "புதிய ஆதனங்கள்" மதிப்பீடு செய்யும் முடிவை இத்தால் பொது மக்களுக்கு அறியத்தருகின்றோம்.

ஏ. எம். எம். நௌஷாட்,
தவிசாளர்,
சம்மாந்துறை பிரதேச சபை.

### தீர்மானம்

இப்பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குட்பட்ட பின்வரும் எல்லை கொண்டதுமான சம்மாந்துறை பிரதேச செயலகப்பிரிவின் கைகாட்டிய படி சந்தியையும் அம்பாறை பிரதான வீதியையும் இணைக்கும் S வாய்க்கால் வீதிக்கு வடபுறமாக உள்ள பிரதேசம் முழுவதும் அதாவது மல்வத்தை 1, மல்வத்தை 2, மல்வத்தை 3, மல்வத்தை 4, வளத்தாப்பிட்டி, மல்கம்பிட்டி, சென்னல் கிராமம் 1, சென்னல் கிராமம் 2, மற்றும் புளக்"ஜே" மேற்கு 02 இன் S வாய்க்கால் வீதிக்கு தென்புரத்திலமைந் துள்ள பிரதேசம் தவிர்ந்த ஏனைய கிராம சேவகர் பிரிவுகள் அனைத்தும் புதிய ஆதனங்கள் மதிப்பீடு செய்வதற்கு பிரகடனப்படுத்தப்படுகின்றது.

சம்மாந்துறை பிரதேச செயலகப்பிரிவின் கீழ் வரும் கிராம சேவகர் பிரிவகள் மதிப்பீடு செய்யப்படவுள்ளன :-

| | | |
|---|---|---|
| (I) | கருவாட்டுக்கல் | - 01 |
| (II) | கருவாட்டுக்கல் | - 02 |
| (III) | கருவாட்டுக்கல் | - 03 |
| (IV) | வீரமுனை | - 04 |
| (V) | புளக் "ஜே" கிழக்கு | - 01 |
| (VI) | புளக் "ஜே" கிழக்கு | - 02 |
| (VII) | புளக் "ஜே" கிழக்கு | - 03 |
| (VIII) | கல்லரிச்சல் | - 01 |
| (IX) | கல்லரிச்சல் | - 02 |
| (X) | கல்லரிச்சல் | - 03 |
| (XI) | புளக் "ஜே" மேற்கு | - 01 |
| (XII) | புளக் "ஜே" மேற்கு | - 02 |
| (XIII) | மலையடிக் கிராமம் | - 01 |
| (XIV) | மலையடிக் கிராமம் | - 02 |
| (XV) | மலையடிக் கிராமம் | - 03 |
| (XVI) | மலையடிக் கிராமம் | - 04 |
| (XVII) | உடங்கா | - 01 |
| (XVIII) | உடங்கா | - 02 |
| (XIX) | விளினையடி | - 01 |
| (XX) | விளினையடி | - 02 |
| (XXI) | விளினையடி | - 03 |
| (XXII) | சம்மாந்துறை | - 12 |

4-712

## கொபேகனே பிரதேசசபை

பன்னவ புதிய மதிப்பீட்டு வலயத்தை பெயரிடுதல்

பன்னவ புதிய வரி மதிப்பீட்டு வலயமாக பிரகடனப்படுத்தும் போது பன்னவ ரபுகன பாதையின் இரு புரங்களிலும் 1400 மீற்றர் அளவு பிரதேசம் வரிமதிப்பீட்டு வளயமாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ள வளயமானது திரு. எம். எல். எம். காசிம் அவர்களின் வீட்டின் (வலது பக்கம்) முதல் திரு. எம். ஐ. எம். சுஹைப் அவர்களின் வீட்டின் (இடது பக்கம்) முதல் ஆரம்பித்து பாதையின் இரு பக்கங்களிலும் சிங்கள பாடசாலை வரை உள்ள பிரதேசத்தின் கீழ் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவர்களின் பத்திர இலக்கத்தையும், வரைபட இலக்கத்தையும் 2011.06.03 ஆந் திகதி அன்று பள்ளிவாசலுக்கு எடுத்துக்கொண்டு வரும்படி தயவுடன் வேண்டிக்கொள்கின்றேன்.


செயலாளர்,
கொபெகனே பிரதேச சபை.

| இல. | பெயர் | பத்திர இல. | வரைபட இல. |
|---|---|---|---|
| 1. | திரு. எம். ஐ. எம். ஜுனைட் | 9118 | 1644 |
| 2. | திரு. எம். எச். எம். உவைஸ் | 18818 | 1644 |
| 3. | திரு. எஸ். எம். பாரிஸ் | 8291 | 1644 |
| 4. | திரு. ஏ. எச். எம். இப்ராஹீம் | குரு/பு 77773 | 1644 |
| 5. | திரு. ஏ. எம். எம். காசிம் | குரு/பு 77773 | 1644 |
| 6. | திரு. ஏ. சீ. எம். அமீன் | குரு/பு 77773 | 1644 |
| 7. | திரு. ஏ. எச். எம். ரசாக் | குரு/பு 77773 | 1644 |
| 8. | திரு. எம். சீ. எல். கலீல் | குரு/பு 77773 | 1644 |
| 9. | திரு. ஏ. ஐ. பிரதவுஸ் | 45569 B | 1644 |
| 10. | திரு. ஏ. ஐ. ஹர்ஸ் அஸ்ரத் | 45569 A | 1644 |
| 11. | திரு. யு. எல். அலி இப்ராஹீம் | வசிப்பதில்லை | 1644 |
| 12. | திரு. யு. எல். எம். ரிஸ்வி | 7475 | 1644 |
| 13. | திரு. ஏ. எச். எம். உதுமா லெப்பை | 7475 | 1645 |
| 14. | திரு. ஏ. எல். இஸ்மி | 30987 | 1645 |
| 15. | திரு. ஏ. எச். எம். சாவுல் ஹமீட் | 2107 | 1645 |
| 16. | திரு. ஏ. சீ. எஸ். ஆப்தீன் | 144 | 1645 |
| 17. | திருமதி ஐ. சித்தி ஹம்சியா | 13220 | 1645 |
| 18. | திரு. ஐ. எல். தாஹிர் | | |
| 19. | திருமதி எம். சி. ரிஸானா | | |
| 20. | திரு. எம். சீ. அபுல் ஜப்வார் | | |
| 21. | திரு. செய்லாப்தீன் | | |
| 22. | திரு. நஜிப்தீன் (இரண்டு மாடி) | 25619 | 1645 |
| 23. | திருமதி எம். எல். மீரா லெப்பை | 25619 | 1645 |
| 24. | கூட்டுறவுக்கடை | அரச காணி | 1645 |
| 25. | பாலர் பாடசாலை | அரச காணி | 1645 |
| 26. | கூட்டுறவு களஞ்சியசாலை | அரச காணி | 1645 |
| 27. | சபை மண்டபம் | அரச காணி | 1645 |

| இல. | பெயர் | பத்திர இல. | வரைபட இல. |
|---|---|---|---|
| 28. | திருமதி ஏ. எம். அசீதா | 1334 | 1644 |
| 29. | திரு. ஏ. எஸ். ரசான்தீன் | 323 சொந்தமான | 1645 |
| 30. | திரு. இக்பால் | | |
| 31. | திரு. ஏ. ஆர். சபிஉல்லா | 1777 சொந்தமான | 1645 |
| 32. | திரு. ஏ. எல். சுவைஸ் | | |
| 33. | திரு. ரகுமான் | | |
| 34. | திரு. ஏ. சீ. எம். அப்துல் காதர் | 2512 சொந்தமான | 1645 |
| 35. | திரு. இஸ்ஹாக் லெப்பே | 9182 சொந்தமான | 1645 |
| 36. | திரு. ஏ. சீ. எம். நசீர் | | |
| 37. | திரு. ஹனீபா | | |
| 38. | திரு. வை. எம். நிபாஹிர் | | |
| 39. | திரு. யூ. எல். ஹசீஸ் | | |
| 40. | திரு. யூ. எல். மசீர் | | |
| 41. | திரு. என். மொஹமட் | | |
| 42. | திரு. ஐ. எல். எம். மாஹிர் | | |
| 43. | திரு. எம். ஆர். ஈ. நாசர் | 577 | 1645 |
| 44. | திரு. எம். எச். ரிஸ்வான் | | |
| 45. | திரு. காதர் | | |
| 46. | திரு. ஹபீப் | 6465 | 1645 |
| 47. | திரு. இம்தியாஸ் | 6465 | 1645 |
| 48. | திரு. ஈ. ஏ. அசீம் | 6465 | 1645 |
| 49. | திரு. ஏ. சீ. எம். நசார் (ஒரு காணி) | 1850 சொந்தமான | 1645 |
| 50. | திரு. ஏ. சீ. எம். நசார் (ஒரு காணி) | 1850 சொந்தமான | 1645 |
| 51. | திரு. ஏ. சீ. எம். தஸ்லீம் (ஒரு காணி) | 1850 சொந்தமான | 1645 |
| 52. | திரு. பீ. அப்துல் காதர் | | |
| 53. | திரு. அர்சாத் | | |
| 54. | திரு. அபூர் | | |
| 55. | திரு. நிஜாம்தீன் | | |
| 56. | திருமதி உம்மு லதீபா | | |
| 57. | திரு. இஸ்மாயீல் | | |
| 58. | திருமதி செஹா உம்மா | | |
| 59. | திரு. ஏ. பீ. அபூபக்கர் | | |
| 60. | திரு. நசீம் | | |
| 61. | திரு. ஹுசைன் | | |
| 62. | திரு. பாஹிம் | | |
| 63. | திரு. எம். எல். எம். காசீம் | பரம்பரை பன்னவ | 1644 |
| 64. | திரு. தஸ்லீம் | | |
| 65. | திரு. எம். சீ. எம். ஹனீபா | 10983 பன்னவ | 1644 |
| 66. | திரு. ஐயூப் | 951 | 1645 |
| 67. | திரு. எம். எஸ். எம். இஸ்மாயில் | 1196 | 9053 |
| 68. | திருமதி ஏ. எச். லெய்ஸா உம்மா | 993 | |
| 69. | திருமதி ஏ. எச். ஸரீபா | 13953 | 1644 |
| 70. | திரு. ஏ. ஏ. எம். ராசிக் | 665 | 1764 |

| இல. | பெயர் | பத்திர இல. | வரைபட இல. |
|---|---|---|---|
| 71. | திரு. ஜே. எம். ஹாசீம் | 13952 | 1644 |
| 72. | திருமதி எஸ். எல். சஜீதா உம்மா | 992 | 1644 |
| 73. | திரு. எஸ். எல். அபூதாலிப் | 993 | 1644 |
| 74. | திரு. எஸ். எல். என். நெய்னா மொஹமட் | 994 | |
| 75. | திருமதி எஸ். எல். நஜீமா உம்மா | | |
| 76. | திரு. எம். எல். முத்தலிப் | | |
| 77. | திரு. ஏ. டபிள்யூ. நசீர் | 34048 | 1645 |
| 78. | திரு. எம். ஐ. எம். ராசிக் | 34048 | 1645 |
| 79. | திரு. பீர் மொஹம்மது | | |
| 80. | திரு. பி. எம். எம். ஹாசீம் | | |
| 81. | திரு. ஏ. பீ. எம். சமீன் | | |
| 82. | திரு. ஹாசீம் | | |
| 83. | திரு. நௌபர் | | |
| 84. | திரு. சலீம் | | |
| 85. | திருமதி ஐ. எல். எம். மரியம் பீபி | 219 கழி | 1645 |
| 86. | திருமதி ஐ. எல். எம். ஆய்ஸா உம்மா | | |
| 87. | திரு. ஏ. எச். எம். உதுமா லெப்பை | 213 | 1645 |
| 88. | திரு. ஏ. எச். எம். காசிம் | 213 | 1645 |
| 89. | திரு. அப்துல் ரசாக் | | |
| 90. | திரு. முபாரக் | 216 | 1645 |
| 91. | திரு. எஸ். எம். இஸ்மியான் | 216 | 1645 |
| 92. | திருமதி ஐ. எல். கதீஜா உம்மா | குரு/பு 80328 | 1644 |
| 93. | பள்ளிவாசலுக்குச் சொந்தமான பங்கு | | |
| 94. | திரு. ஐ. எல். எம். ராசிக் | குரு/பு 25394 | 1442 |
| 95. | திரு. ஐ. எல். எம். மிஹ்லார் | குரு/பு 225395 | 1442 |
| 96. | திரு. ஐ. எல். எம். நிசார் | குரு/பு 123396 | 1442 |
| 97. | திரு. ஐ. எல். எம். தாஹிர் | குரு/பு 123397 | 1442 |
| 98. | திரு. இஷாக் லெப்பை | | |
| 99. | திரு. இஷாக் | | |
| 100. | திரு. ஏ. எச். எம். நியாஸ் | குரு/பு 21090 | 1645 |
| 101. | திரு. ஏ. பீ. நூஹு | | |
| 102. | திரு. அப்துல் லத்தூர் | 3938 | 1645 |
| 103. | திரு. ஏ. எல். நிலார் | 1191 | 1645 |
| 104. | திரு. ஐ. ஐ. அஹமது லெப்பை | 1191 | 1645 |
| 105. | திரு. ஐ. எல். தம்சீர் | 6702 | 1645 |
| 106. | திரு. ஏ. எச். அமீர் அக்பர் | 32702 | 1645 |
| 107. | திரு. ஐ. பீ. ஹார்தீன் | 4371 | 1645 |
| 108. | திரு. எம். எச். எம். நிஹாஸ் | 4371 | |
| 109. | திரு. யு. எல். ஷரீப் | 13575 | 6667 |
| 110. | திரு. புஹாரி | 13758 | 6667 |
| 111. | திரு. ரம்சான் | | |
